**<u>வாக்குமூலம்</u>**
**<u>தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.</u>**
**<u>வழக்கு எண் : SC.No. 373/2023</u>**
**<u>வழக்கு சாட்சி PW-9</u>**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | வெள்ளத்துரை | தாலுகா | : | ஆலங்குளம் |
| தந்தை பெயர் | : | ஆறுமுகம் | தொழில் | : | உதவி ஆய்வாளர் (ஓய்வு) |
| கிராமம் | : | ஆலங்குளம் | வயது | : | 62 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of August 13th, 2025.

**(எதிரி மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**<u>முதல் விசாரணை :</u>**

நான் ஆலங்குளத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து தற்போது ஓய்வு பெற்று விட்டேன். நான் குற்றாலம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது, கடந்த 28.12.2022ம் தேதி, 21.45 மணிக்கு நிலைய பொறுப்பில் இருந்தபோது, தென்காசி அரசு மருத்துவமனையிலிருந்து கிடைத்த தகவலின் படி, மருத்துவமனை சென்று மாரியப்பன் என்பவர் கொடுத்த புகார்வாக்குமூலத்தை பதிவு செய்து, நிலையம் வந்து அதன் தன்மைப்படி காவல் நிலைய குற்றஎண்.434/2022, சட்டப்பிரிவுகள் 294(பி), 324, 307, 506(2) இதசவின் படி முதல் தகவல்அறிக்கை பதிவு செய்து, அதன் அசலை செங்கோட்டை நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கும், இதர நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும், ஒரு நகலை காவல் ஆய்வாளர் பார்வைக்கும் வைத்தேன். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆகும். காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :</u>**

எனக்கு இன்டிமேஷன் எந்த முறையில் கிடைக்கப்பெற்றது என்று முதல்தகவல்அறிக்கையில் நான் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். காயம்பட்ட நபர் நான் வாக்குமூலம் பதிவு செய்ய செல்லும் போது, எந்த வார்டில் இருந்தார் என்ற விபரத்தை என்னால் கூற இயலாது. சிகிச்சையில் இருந்தவருடன் யார், யார் இருந்தார்கள் என்பதை என்னால் கூற முடியாது என்றால் சரிதான். புகார் வாக்குமூலத்தில் அறிவேன் சாட்சியாக கையெழுத்து செய்தவர் யார் என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் எனக்கு ஞாபகமில்லை. புகார் வாக்குமூலம் என்னால் கைப்பட எழுதப்படவில்லை என்றால் என்னுடன் வந்த ரைட்டர் தான் எழுதினார். அதனை நான் புகார் வாக்குமூலத்தில் குறிப்பிட்டு எழுதவில்லை என்றால் சரிதான். அந்த ரைட்டர் யார் என்றால் கணேசன் என்ற நபர் எழுதினார். 4 வது லைனில் இடைச்சொருகல் உள்ளது என்றால் சரிதான்.

6 வது வரிசையில் அடித்து, திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதற்கான தனிப்பட்ட காரணம் கூற இயலாது என்றால் சரிதான். புகார் வாக்குமூலத்தில் எந்த வகையான ஆயுதம் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். தடுக்காவிட்டால் மரணம் விளைவிக்கக்கூடிய கொடுங்காயம் ஏற்பட்டிருக்கும் என்று புகார் வாக்குமூலத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். புகார் வாக்குமூலத்தில் ஆபாசமாக பேசியதினால் அவமானமோ, அருவருப்போ ஏற்பட்டதாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான். காயம்பட்டவருக்கோ, அல்லது வேறு நபருக்கோ உயிர் பயம் ஏற்பட்டதாக நான் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். நான் சொன்ன நாள்,நேரத்தில் எந்த ஒரு

தகவலும் பெறவில்லை என்றாலும், நான் சொன்ன நாளில், சொல்லியுள்ள இடத்தில் வைத்து எந்தவொரு புகார் வாக்குமூலமும் பெறவில்லை என்றாலும் சரியல்ல. மேலதிகாரிகளின் உத்தரவின் பேரில் பொய்யான வாக்குமூலம் தயார் செய்து, அதன் பேரில் முதல்தகவல்அறிக்கை பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u> –**

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.08.14 18:27:15 +0530